

சஞ்சீவி நகர் மோகன கலாசார மையத்தில் நடந்த ஒரு நாள் கிராமிய சுற்றுலா துவக்க விழாவை அமைச்சர் கல்யாணசுந்தரம் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். அருகில் அமைச்சர் ராஜவேலு, சிறப்பு செயலர் மேத்யூ சாமுவேல்.

# மோகன கலாசார மையத்தில் கிராமிய சுற்றுலா துவக்கம்

புதுச்சேரி, ஆக. 20-

சஞ்சீவி நகர் மோகன கலாசார மையத்தில் ஒரு நாள் கிராமிய சுற்றுலா துவக்க விழா நடந்தது.

புதுச்சேரி சுற்றுலாத்துறையும், மோகன கலாசார மையமும் இணைந்து ஒரு நாள் கிராமிய சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்திருந்தது. சுற்றுலாத் துறை செயலாளர் பாபு வரவேற்றார். இயக்குனர் சிவக்குமார் வாழ்த்தி பேசினர்.

அமைச்சர் கல்யாணசுந்தரம் சிறப்புரையாற்றினார். அமைச்சர் ராஜவேலு ஊரக சுற்றுலாவைத் துவக்கி வைத்து பேசுகையில், கிராமிய கலை உணர்வுமிக்க இந்த ஊர் என் மனதைக் கவர்ந்து விட்டது. இந்த ஊரை மத்திய அரசு 'கிராம சுற்றுலாத்தலமாக' அறிவித்துள்ளது.

புதுச்சேரியில் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு இது போன்ற நிகழ்ச்சிகளை அவ்வப்போது நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த ஊர் சர்வதேச நகரமான ஆரோவில்லிற்கு அருகில் இருப்பதால் ஒவ்வொரு ஆண்டும் 500 முதல் 600 சுற்றுலாப்பயணிகள் மோகன கலாசார மையத்தைப் பார்வையிட்டு செல்கின்றனர்.

இவை மேலும் வளர்ச்சியடைய சுற்றுலாத் துறை ஒத்துழைக்கும் என்றார். நிகழ்ச்சியில் கலை பண்பாட்டுத் துறை அதிகாரிகள், மக்கள் கலந்து கொண்டனர்.

Scanned with CamScanner